# DEPOSITION OF WITNESS
## UNDER CODE OF CRIMINAL PROCEDURE

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 141/2025** |
| **Ranking of witness** | **:** | **PW2** |
| **Name** | **:** | **முத்துலிங்கம்** |
| **Father's Name** | **:** | **த/பெ. மாரியப்பன்** |
| **Age** | **:** | **45** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15-10-2025.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையானார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பொம்மசமுத்திரம் கிராமத்தில் குடியிருந்து, கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த தனுஷ் என்னுடைய மூத்த மகன் ஆவார். சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள், தருமபுரியில் இருந்து பென்னாகரம் செல்லும் சாலையில், அதகப்பாடி கிராமத்திற்கும், ஆட்டுக்காரம்பட்டி கிராமத்திற்கு நடுவில் இருக்கும், பேக்கரி ஒன்றின் எதிரில், இருசக்கர வாகனத்தில் சென்ற என்னுடைய மகன்மீது Pulsor இருசக்கர வாகனம் மாலை 07.00 மணிக்கு மோதி, விபத்து ஏற்பட்டதாக முருகன் என்பவர் தகவல் சொல்ல, நான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த என் மகனை பார்த்தேன். சுமார் 3 நாட்கள் கழித்து, என்னுடைய மூளைச்சாவு அடைந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறியதால், அவருடைய உடல் உறுப்புகளை தானம் செய்ய முன் வந்தோம். அதை தொடர்ந்து என்னுடைய மகன் இறந்துவிட்டார். அங்கு நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். போலீசார் இதுகுறித்து என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

விபத்து சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனவே, விபத்தை நேரடியாக பார்க்காததால், யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால், சரியல்ல. விபத்தில் நடைபெற்ற இடத்தை பார்க்கும்போது, எதிரியால்தான் நடைபெற்றது என்பது தெரிய வருகிறது. நான் போலீசார் விசாரணையின் போது நான் நேரில் சம்பவம் இடம் சென்று பார்வையிட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் ஓட்ட செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் எனது மகனுக்கு இல்லை என்றால் சரிதான். விபத்தின்போது அவர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரி. என் மகன் இறந்ததற்கு நஷ்டஈடு கேட்டு மோட்டார் வாகன தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. நான் விபத்து நடந்த இடத்தை நேரில்

பார்க்கவில்லை என்றும், இவ்வழக்கிற்காக பொய்யாக நேரில் பார்த்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் மருத்துவமனையில் மட்டும்தான் விசாரித்தார்கள். வேறு எங்கும் விசாரிக்கவில்லை.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**